## சுருக்கம்

முதலமைச்சரின் பொது நிவாரண நிதி – பல்வேறு காரணங்களால் உயிரிழந்த 7 விவசாயிகளின் குடும்பத்தினருக்கு அவர்களின் வறிய நிலையைக் கருதி தலா ரூ.3.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.21.00 இலட்சம் நிவாரணம் வழங்க நிதி ஒப்பளிப்பு – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### வேளாண்மைத் (வே.உ.6) துறை

அரசாணை (நிலை) எண்.159. நாள்: 28.6.2017.

திருவள்ளுவர் ஆண்டு 2048, ஆனி–14.

படிக்க:

1. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 10.01.2017 நாளிட்ட செய்தி குறிப்பு.
2. அரசாணை (நிலை) எண்.6, வருவாய் (பே.மே.3(1)) துறை, நாள் 10.1.2017.
3. அரசாணை (நிலை) எண்.24, வருவாய் (பே.மே.3(1)) துறை, நாள் 24.1.2017.
4. அரசாணை (நிலை) எண்.73, வேளாண்மைத் (வேஉ.6) துறை, நாள் 14.3.2017.
5. வேளாண்மை இயக்குநரின் கடித எண்.பொது2/126110/2016, நாள் 19.5.2017.

----

ஆணை:

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் 10.1.2017 நாளிட்ட செய்தி குறிப்பில், பிறவற்றுடன் பின்வரும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்:-

> "கடந்த இரண்டு மாதங்களில் 17 விவசாயிகள் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். விவசாயிகளின் அந்த தற்கொலைகள் பல்வேறு காரணங்களுக்காக ஏற்பட்டிருந்தாலும், இறந்தவர்களின் குடும்ப நலன் கருதி, அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3.00 இலட்சம் ரூபாய் வழங்கப்படும்."

2. அதனடிப்படையில், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், 17 விவசாயிகளின் தற்கொலைகள் பல்வேறு காரணங்களுக்காக ஏற்பட்டிருந்தாலும், இறந்தவர்களின் குடும்ப நலன் கருதி, அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ரூ.3.00 இலட்சம் வழங்கப்படும் என ஆணை வெளியிடப்பட்டது.

3. மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், பல்வேறு காரணங்களால் தற்கொலை செய்து கொண்ட 17 விவசாயிகளின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.51.00 இலட்சம் முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

4. மேலே நான்கில் படிக்கப்பட்ட அரசாணையில், பல்வேறு காரணங்களால் உயிரிழந்த 65 விவசாயிகளின் குடும்பத்தினருக்கு தலா ரூ.3.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.1.95 கோடி முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்து ஆணை வெளியிடப்பட்டது.

(த.பி.பா)

5. மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்பட்ட அறிக்கைகளின் அடிப்படையில், வேளாண்மை இயக்குநர் மேலே ஐந்தில் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், பல்வேறு காரணங்களால் உயிரிழந்த கீழ்க்காணும் 7 விவசாயிகளின் குடும்ப நலன் கருதி அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து நிவாரணம் வழங்க அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்:-

| மாவட்டம் | வ.எண். | பல்வேறு காரணங்களால் தற்கொலை செய்துகொண்ட மற்றும் உயிரிழந்த விவசாயிகளின் விவரம் |
|---|---|---|
| கடலூர் | 1 | திருமதி பட்டு (58), க/பெ. கோவிந்தன், கம்மபுரம் கிழக்கு காலணி, விருத்தாச்சலம் வட்டம், கடலூர் மாவட்டம். |
| தஞ்சாவூர் | 2 | மகாதேவன் (74), த/பெ. அர்ச்சுனன், கீழத்தெரு, சோழன் மாளிகை கிராமம், கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| அரியலூர் | 3. | சீ.சிற்றரசன் (39), த/பெ.சீனிவாசன், சோழமாதேவி கிராமம், உடையார்பாளையம் வட்டம், அரியலூர் மாவட்டம். |
| தஞ்சாவூர் | 4. | ஜி.இளங்கோவன் (46), த/பெ.கணபதி, கொடியாளையம், திருக்கோடிகாவல் கிராமம், திருவிடைமருதூர் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம். |
| திருச்சிராப்பள்ளி | 5. | சின்னப்பன் (51), த/பெ. பெரியசாமி, உப்பிலியா தெரு, பெரியகொடுந்துறை கிராமம், பெரியகொடுந்துறை மஜரா, முசிரி வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| திருச்சிராப்பள்ளி | 6. | சு.அழகர்சாமி (40), த/பெ.சுப்புராமன், புதுமணியம்பட்டி, முகவனூர் தெற்கு கிராமம், மணப்பாறை வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |
| திருச்சிராப்பள்ளி | 7. | சி.முத்தரசு (67), த/பெ. சிட்டப்புடையார், தெற்கு சேர்பட்டி, கே.பெரியப்பட்டி வடக்கு கிராமம், மணப்பாறை வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம். |

6. வேளாண்மை இயக்குநரின் கருத்துருவின் அடிப்படையில், மேலே பத்தி 5-ல் தெரிவிக்கப்பட்டுள்ள, பல்வேறு காரணங்களால் உயிரிழந்த 7 விவசாயிகளின் குடும்பத்தினருக்கு, தலா ரூ.3,00,000/- (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) வீதம் மொத்தம் ரூ.21,00,000/- (ரூபாய் இருபத்தொன்று இலட்சம் மட்டும்) முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

7. மேலே பத்தி 6-ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை ரூ.21,00,000/-ல், (ரூபாய் இருபத்தொன்று இலட்சம் மட்டும்) கடலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு **ரூ.3,00,000/-** (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்), தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு **ரூ.6,00,000/-** (ரூபாய் ஆறு இலட்சம் மட்டும்), அரியலூர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு **ரூ.3,00,000/-** (ரூபாய் மூன்று இலட்சம் மட்டும்) மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு **ரூ.9,00,000/-** (ரூபாய் ஒன்பது இலட்சம் மட்டும்) காசோலையாக அனுப்பி வைக்குமாறு அரசு துணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதித் (முதலமைச்சர் பொது நிவாரண நிதி) துறை, சென்னை-600 009 அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(த.பி.பா)

8. மேலும், மேற்காணும் நிகழ்வில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு வேறு எந்த வகையிலும் அரசின் நிதியுதவி ஏற்கனவே வழங்கப்பட்டிருப்பின், அத்தொகையை இந்நிதியிலிருந்து பிடித்தம் செய்து முதலமைச்சர் பொது நிவாரண நிதி என்ற பெயருக்கு வழங்கத் தக்க வகையில் காசோலை / வரைவோலையாக அனுப்பும்படியும் மீதமுள்ள தொகையை உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு காசோலை மூலமாகவோ அல்லது அஞ்சலக / வங்கி சேமிப்பு கணக்கு மூலமாகவோ உரிய நடைமுறை விதிகளின்படி வழங்கி அவர்களிடமிருந்து வரிவில்லையிட்ட பற்றுச் சீட்டுகளைப் பெற்று அதில் வட்டாட்சியர் பதவிக்கு குறையாத அலுவலரின் சான்றொப்பம் மற்றும் உரிய அலுவலக முத்திரையுடனும் அரசு துணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதித் (முதலமைச்சர் பொது நிவாரண நிதி) துறை, சென்னை–600 009 அவர்களுக்கும் அதன் நகலினை வேளாண்மை / வருவாய்த்துறைக்கும் அனுப்பி வைக்குமாறு தொடர்புடைய மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

9. இவ்வரசாணை நிதித்துறையின் அலுவல் சார்பற்ற எண்.34369/ நிதி (முதலமைச்சர் பொது நிவாரண நிதி)/2017, நாள் 28.6.17–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப் படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ககன்தீப் சிங் பேடி,
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

அரசு துணைச் செயலாளர் மற்றும் பொருளாளர், நிதித் (முதலமைச்சர் பொது நிவாரண நிதி) துறை, சென்னை–600 009. (3 படிகள்)
முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–600 005.
அரசு செயலாளர், வருவாய்த்துறை, சென்னை–600 009.
இயக்குநர், வேளாண்மைத்துறை, சென்னை–600 005.
மாவட்ட ஆட்சியர், கடலூர், தஞ்சாவூர், அரியலூர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

<u>நகல்</u>

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600 009.
மாண்புமிகு மீன்வளம், நிதி, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–600 009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை, சென்னை–600 009.
அரசுச் செயலாளர், வருவாய்த்துறை, சென்னை–600 009.
தனி அலுவலர், முதலமைச்சர் தனிப்பிரிவு, சென்னை–600 009.
வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், வேளாண்மைத்துறை, சென்னை – 600 009.
நிதித் (வரவு செலவு ஒருங்கிணைப்பு / வரவு செலவு பொது I & II / வருவாய் / வேளாண்மை) துறை, சென்னை – 600 009.
வேளாண்மைத் (அநமு3) துறை, சென்னை–9 (இரண்டு நகல்கள்).
கணினி விவரத் தொகுப்பாளர், வேளாண்மைத் துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்கள்.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

28/6/2017

பிரிவு அலுவலர்.

28/6/17